செய்தித் தாளாகப் பதிவுபெற்றது; வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம்: நள ஞு ஆவணி மீ உரு-உ வெள்ளிக்கிழமை (10-9-1976) [இல: உ௩

# இசைக் கலைக்குப் பெருந் தொண்டு இயற்றும் பெரியார்

## தமிழிசை விழாவில் இசையரசுப் பட்டம்

"வித்துவான் G. ஐயாக்கண்ணு தேசிகர் குரு-சிஷ்யர் பரம்பரையில் வந்த ஓர் உத்தம கலைஞர்; இவரது சங்கீத மரபு இந்தியாவில் பிரபல வித்துவானாக விளங்கிய திரு. நடேசபிள்ளை அவர்களுடைய மரபில் வந்த சித்தூர் சுப்பிரமணியபிள்ளை - மதுரை சோமு போன்றவர்களுடைய சிறந்த பாரம்பரியம் மிக்க மரபில் வந்தவர் என்றும் சித்தூர் - சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் சிஷ்யர் ஆக பல காலம் இருந்து இசை பயின்று வித்துவானாக மிளிர்கின்றவர்; அவர் இலங்கையில் வாழ்ந்துகொண்டிருப்பது இலங்கைத் தமிழராகிய நாம் செய்த பெரும் புண்ணியம் எனலாம். இன்னும் தொடர்ந்து இவர் சேவை செய்துவர திருவருள் துணை செய்ய வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக; இவரது தொண்டு மேலும் வளரட்டும்'.

யாழ். அ. இசைத் தமிழ் மன்றத்தின் 18-ஆவது தமிழிசைவிழாவில விழாத் தலைவராக விளங்கிய வித்வான் G. ஐயாக்கண்ணு தேசிகருக்கு 'இசையரசு' என்னும் பட்டமளித்த இசையரசு P. சந்திரசேகரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ் விழா நல்லை ஆதீன கலாமண்டபத்தில் 29 8 76 முதல் 4-9-76 வரை சிறப்பாக நிகழ்ந்தது. பரமாசாரியசுவாமிகளின் ஆசியுரையுடன் விழா ஆரம்பமாயது.

இதையடுத்து திரு தேசிகர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துப் பாராட்டுரை வழங்குகையில் வைத்தியகலாநிதி K. சிவஞானரத்தினம் குறிப்பிட்டதாவது:—

"இசைக் கலையின் வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டு புரிந்து வருபவர் திரு G. ஐயாக்கண்ணு தேசிகர் அவர்கள். ஈழம் வந்த நாள் முதல் இக் கலையின் வளர்ச்சிக்காகப் பல மன்றங்களைத் தாபித்து பணி புரிந்துவந்துள்ளார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரியிலும் பல ஆண்டுகளாக ஆசிரியராயிருந்து கர்நாடக சங்கீதத்தை சிறந்த முறையில் வளர்த்து வந்த பெருமை இவரைச் சார்ந்தது; இசைக் கலை வளரவேண்டும்என்ற பேரார்வமுடைய இப் பெரியார் அக்கலையின் வளர்ச்சிக்காக என்றும் உதவத் தயாராகவுள்ளார்; இத் தகைய ஒரு இசை மேதைக்கு "இசையரசு" என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்துப் பாராட்ட முன்வந்த யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்துக்குப் பாராட்டுத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்"

இசையரசுபட்டம்பெற்ற வித்துவான் ஐயாக்கண்ணு தேசிகர் நன்றியுரை நவிலுகையில் பின்வருமாறு கூறினர்.

"யாழ்ப்பாணத்தில் ஒரு சில மன்றங்கள் மிக அரும்பாடுபட்டு இசையை வளர்த்து வருகின்றன. அவற்றுள் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் செய்யும் சேவை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்; இம் மன்றத்தின் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை இதனுடன் தான் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகக்கூறி, தன்னை இம் மன்றம் கௌரவித்தமைக்காக மிகுந்த நன்றியுள்ளவனாக இருப்பேன் என்றார்.

தேசிகர் மேலும் பேசுகையில் மன்றங்களை இயக்குவது அதுவும் இக்காலத்தில மிகுந்த சிரமதுக்குள்ளான ஒன்றென்றும் அநேக மன்றங்கள் தொடங்கி ஒரு சில மாதங்களுள் வருவாயில்லாத காரணத்தால் அழிந்தொழிந்து போகின்றன என்றும் கூறிய அவர் அ. இ. த. மன்றம் போன்ற இரண்டொருமன்றங்கள் ஏக கஷ்டத்தையுந் தாங்கி இயங்கி வருவது போற்றத்தக்கது என்றும் சொன்னார். தொடர்ந்து கருத்துரை வழங்குகையில் யாழ் நகரில் உள்ள ஒரு சில சங்கீதசபைகளிடம் நிதிவசதியிருப்பதாகவும் அவற்றுக்கு உதவியாக இயங்குகின்ற அ. இ. த. மன்றம்போன்ற சிறந்த மன்றங்கட்கு சிறு உதவி செய்து ஊக்குவிப்பது பெரும் பயன விளைக்கும் என்றும் தெரிவித்தார். இசை விழாவில் தினமும் ஏராளம் பேர் திரண்டு இரசித்தனர்.

"நாயன்மார்-நாதன்"

---

உ
சிவமயம்

## சைவ பரிபாலன சபை
## யாழ்ப்பாணம்
## 87-வது
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

சைவ பரிபாலன சபையினது பொதுக் கூட்டம் நள வருடம் ஆவணி மாதம் 27-ஆம் தேதி (12-9-76) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு சபை நாவலா ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்

திருநீறு அணிந்து கொள்ளல்
தேவாரம்

1. சென்ற வருடாந்தக் கூட்ட வரலாறு
2. சென்ற விசேட பொதுக்கூட்ட வரலாறு
3. (A பிரிவு) நிருவாக சபை அங்கத்தவர் வேட்பாளர் பெயர்கள் ஏற்றல்.
4. சைவ பரிபாலன சபையினது செயற்குழுவின் வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்
5. 1974 — 75-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்குகள்
   (அ) சைவ பரிபாலன சபை
   (ஆ) சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
6. தலைவர் நிறைவுரை
7. A பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்
8. புது வருட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்
9. பிரேரணைகள்
10. வேறு விடயங்கள்
11. காரியதரிசி நன்றியுரை

தேவாரம்.

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம். 16-9-76. வை. இரகுநாதமுதலியார், கௌரவ காரியதரிசி.

முக்கிய கவனிப்பு

1. வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 6-9-76 க்கு முன்னர் காரியதரிசிக்கு அனுப்பப் பெறுதல் வேண்டும்.
2. கணக்கு சம்பந்தமான வினாக்கள் 6-9-76 க்கு முன்னர் தனாதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.
3. சந்தாப் பணத்தை 31-7-76-க்கு முன் பாக்கி இன்றிச் செலுத்தியவர்களே வாக்குரிமை உடையவர்களாவார்கள்.

---

# தூய தொண்டர்க்கருளும் துர்க்கா தேவி

## இரதத்தில் இவர்ந்த இணையற்றகாட்சி

ஈழவள நாட்டில் உள்ள துர்கா தேவி ஆலயங்களுள் மிகப் பிரபலயம்வாய்ந்த ஆலயமாகத்திகழ்வது தேன் பூத்த சோலை வளர் தெல்லியூரில் உள்ள உழுகுடை என்னும குறிச்சியில் அமைந்திருக்கும் துர்க்காதேவி ஆலயமாகும் இவ் வாலயத்தின வருடாந்தத்தேர்த் திருவிழா சென்ற ஞாயிறன்று [5-9-76] நடைபெற்றது

காலை 5 மணி முதல் அபிடேகத் தம்பபூசை, சந்த மண்டபபூசை என்பன நடைபெற்று 8 மணியளவில் துர்க்காதேவி தேரிலே திரு வீதி வலம் வரும் நிகழ்ச்சி ஆரம்பமாயது. ஆலயமணி ஓசை அட்டதிக்குகளும் ஒலிக்க, மக்கள வாத்தியங்களின் நாதமும், அடியார்களின் "அரோகரா ஓசையும் வானை அதைக்க பெண் அடியார்கள் தலையில் கற்பூரச்சட்டி தாங்கிவர 8-45 மணி வரை தேவி முதற் பிரகாரத்தை வலம் வந்து தேரடி அடைந்தார். சரியாக 9 மணிக்கு அடியார்கள வடம் பிடிக்க தேர் அசையத் தொடங்கியது.

தேர் வீதி வலம் வர ஆரம்பித்ததும் தெற்கு வீதியிலுள்ள திருமுறை மடத்தில் இருந்து பண்ணிசைச் செல்வர்கள் அம்பிகை தோத்திரப் பாடல்கள் பாராயணம் செய்துகொண்டிருந்தனர். வீதிகளில் அங்கப் பிரதட்சணம் செய்வோர் ஒரு புறமும் அடியழித்து வணங்குவோர் இன்னோர் புறமும் சூழ்ந்துவர இணுவையூர் அளவையூர் கலைஞர்களின் நாதசுர மேள வாத்தியங்கள் இசையை பரப்பிக்கொண்டு வரவும் அம்பிகை தேரில் வீதிவந்தாள்.

அம்பிகையை அலங்கரித்த சிறப்பு சொல்லத்தரமன்று. புன்முறுவல் பூத்த முகத்துடன் அம்பிகை அடியார்களுக்கு அருள் பாலித்தவண்ணம் வந்து கொண்டிருந்தாள். தேர் இருப்பிடத்தை அடைந்தது அடியார்கள, சிவத்தமிழ செல்வியின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒழுங்கமுறையில் நின்று ஒருவர் பின் ஒருவராக அர்ச்சனைசெய்து கொண்டு சென்றகாட்சி அடியவர்களின் பொறுமையையும் பக்தியையும் நன்கு புலப்படுத்தின. கன்னியர்களும் வயது வந்த தாய்மார்களும் கற்பூரச்சட்டி ஏற்றி தங்கள் நேர்த்திக்கடனை செய்தனர்.

தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றத்தினர் அடியார்களுக்கு தாக சாந்தி முதலான உதவிகளை செய்து அவர்களின் சகல கஷ்டங்களையும் நீக்கிய காட்சி சொல்லில் அடங்காது.

சரியாக 1 மணிக்கு அம்பிகை இச்சையுடன் வழிபாடு செய்யும் அடியவர்க்கு பச்சை சாத்தி தேரிலிருந்து இருப்பிடம் நோக்குங்காலம் இடம்பெற்றது. அந் நேரத்தில வேதியர்கள மலர்களை பன்னீர் முதலான வாசனைத் திரவியங்களையும் அம்பாளுக்கு தூவிய்வண்ணம் வந்தகாட்சி ஆனனும் கண்ணைவிட்டு அகலவில்லை. கோவில்வாசலை வந்தடைந்தது. இளைஞர்கள் சிதறு தேங்காய் அடித்தனர், கரங்குவிவார் உள்ளம மகிழ நாதஸ்வர கலைஞர்கள் பகதிப் பாடல்களை இசைக்க தேவி இருப்பிடஞ் சென்று அமர்ந்தாள இத்தகை காட்சியையும் கண்ட அடியார்கள் அடுத்த இரதோற்சவம் வரும் நாளை எண்ணிய வண்ணம் வீட்டைச் சென்ற காட்சியை எப்படிச் சொல்லமுடியும். நாலாஇடங்களில் இருந்துவந்த அடியார்களுக்கு திருமுறை மடத்தில் அன்னதானம வழங்கப்பட்டது. அம்பிகையை சரண அடைந்தால அதிகவரம பெறலாம் என்ற நம்பிக்கையை உடைய நாங்களும பின்வரும் பாடலைப் பாடி அம்பிகையை துதி செய்வோமாக.

நிறைமதி முகத்தழக
நிமலையே சரணம
நினைவாரின் நெஞ்சிலுறை
நீதியே சரணம்

வளர்ச்சி 2-ம் பக்கம்

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஸ்ரீ ஆவணி மீ கஅ-உ வெள்ளி

## சாதன நங்கையின் சாதனை

நாளை எங்கள் எழில்மிகு நங்கை எண்பத் தெட்டாண்டகவையள் ஆகின்ற அவ்வேளை ஞாபகத் துக்குரியதோர் அருமையுடையதென்பதுண்மை.

கடுகு சிறியது ஆனாற் காரியம் பெரிது ஈரடிக் குறளுக்கிருக்கும் எழில் இந்துசாதனத்துக்கும் இயல் பாய் அமைந்துள்ளது.

எள்ளைப் பிளந்தேழ்கடலைப் புகுத்தியவாறு நாலி தழ் மலரிலே நால் வேதங்கள், நாலேழாகமங்கள் குறிக்கும் பேருண்மையை, நால்வர் நாவார நவின்ற நற்பொருளை, நான்கு சந்தானசாரியர் நயம்பெற உரைத்த சாத்திரத்தை, நாயன்மாரின் நலம்பொலி தொண்டினை தெய்வநெறிப் புராணங்களின் போத னையை வெள்ளிதோறும், நறுமணம் கமழ வைக்கும் இந்துசாதனம் தோற்றத்தில குறுமுனி போலவும் நெறி ஏற்றத்தில் அன்னாரின் அகலமுமென்ன விளங்கி வருகின்றது சைவநெறி விளக்கும் இம்மலரின் இதழ்கள் சிவ கந்தம் வீசிய வண்ணமாயுள்ளன.

செந்தமிழும் திறன்சேர் ஆங்கிலமும் ஒருங்கு திகழ்ந்து வரும் இவ்வேடு சைவமக்களின் கல்வி யேடாய் இலங்குகின்றது எல்லோரும் இதனைப் பெற்று வல்லாராகின்றனரோ என்றால் இல்லையென்றே கூறுகின்றோம். என்னை? இக்கால வாழ்க்கைமுறை மிக்கதோர் மாற்றத்தை அடைந்துவிட்டது. செய்தித் தாள்கள் திடுக்கிடும் நிகழ்ச்சிகளை எடுத்து வெளியிட் டாலன்றி வாழ முடியாத நிலை வந்துவிட்டது; அற நெறி அறிவுரை செறிந்த செய்தி ஏடுகளை வரவேற் பார் அருகி வருகின்றனர்.

அந்நிலைமை என்னென்றாலும் ஆன்றோர் அமை த்த இந்துசாதனம் செந்தமிழுக்கும் சைவத்துக் கும் செய்யும் தொண்டு தொடர்ந்து சிறப்புறத் திருவருட் பெருநிதியைப் பெற்றிருக்கின்றதென்ற ஒன்றே எமக்குச் சமாதானமாகின்றது.

---

## தில்லையம்பதியில் குருபூஜை விழா

சந்தானசாரியர் நால்வருள் ஒருவரான ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா ஆவணித் திங்கள் 11 ஆம் நாள் தில்லையம்பதியில் நடைபெற்றது. காலையில் தில்லையம்பதியிலுள்ள திருக்களாஞ்சேரியில் மறைஞான சம்பந்தர் சமாதிக் கோயிலில் திருவாவடுதுறை - தருமை ஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் மறைஞான சம்பந்தருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடத்தி வைத்தார்கள்.

தில்லையிலுள்ள தருமை ஆதீனக்கிளை மடாலயத்தில் தில்லைத் தமிழ் மன்றத்தார் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராசிரியரான திரு. க. வெள்ளைவாரணம் அவர்கள் தலைமையில் மறைஞான சம்பந்தர் நினைவு நாள் விழா நடைபெற்றது.

விழா ஆரம்பத்தில் மன்றத்தலைவரும் தில்லையம்பதியிலுள்ள ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானின் அறநிலையக் குழுவின் உறுப்பினருமான திரு. ஆர். கனக சபைபிள்ளை அவர்கள் வரவேற்புரை வழங்கினர்.

(எமது சிதம்பரம் நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியம்)

---

## சைவ பரிபாலன சபை சமய பாடப் பரீட்சை 1976

அரையாண்டுப் பரீட்சை நெருக்கடி காரணமாக அநேக பாடசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்க சபையார் பரீட்சையின் விண்ணப்ப முடிவு திகதி 15-9-76 வரை பின்போடப்பட்டுள்ளது பிந்திய விண்ணப்பங்கள் 30-9-76 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பரீட்சைக்குரிய படிவங்கள் மேலும் தேவையாயின் அறிவிக்குமாறும் அன்புடன் வேண்டுகின்றோம். பரீட்சை பாடவிதானத்திற் குறித்தபடி 14-11-76 ல் நடைபெறும்.

[குறிப்பு: க. பொ. த. உயர்தரப் (12-ம் வகுப்பு) பரீட்சையில் இந்து சமயம், இந்து நாகரீகம் ஆகிய இரு பகுதிகளுக்கும் மாணவர்கள் தோற்றலாம்.]

சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 13-7-76,
தொலைபேசி: 356

சி, சிவரத்தினம்
பரீட்சைக் காரியதரிசி

---

சேர். கந்தையா வைத்தியநாதனும்

## திருக்கேதீச்சரமும்

அருள். தியாகராசா

(இ. ஒ. கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி)

முல்வளர்ச் – 3

சிவவிரதங்களுள் தலைசிறந்து விளங்குவது மகா சிவராத்திரிவிரதம் விரதமிருக்க முடியாதவர்கள், சிவாலயங்களுக்குச் சென்றுசிவலிங்கப் பெருமானை வழிபடுவதால் நன்மையடையலாம். அதுவும் முடியாத வியாதியஸ்தர்கள் வயது முதிர்ந்தோர், குழந்தைகள், அங்கக் குறைவுடையோர்கள் வீட்டிலிருந்துகொண்டே சிவசந்நிதியில் சிவன் புகழை ஒதினாலும் ஓதக்கேட்டாலும் பெரும் பயனடையலாம். சேர். வைத்தியநாதனவர்கள் திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபையின் தலைவராகப் பணிசெய்யத் தொடங்கிய பின்னர் மகா சிவராத்திரிவிழா அவ்வாலயத்தில் மிக்க பக்தி சிரத்தையுடன் சிறப்பாகக் கொண்டாடப் படுவதைச் சைவ உலகம் நன்கறியும் மகாசிவராத்திரி விசேட நிகழ்ச்சிகளையும், நான்கு சாமப் பூசைகளையும், இலங்கை வானொலி மூலம் அஞ்சல் செய்தால ஈழநாட்டிலுள்ளவர்களும் தென்னாட்டிலுள்ளவர்களும், மலேசியா நாட்டிலுள்ளவர்களும் கூடபெரும் பயனடைவார்கள் என்ற எனது கருத்தை மிக்க வியத்துடன் அப்பெரியாருக்குச் சமர்ப்பித்தேன். அப்பொழுது அவர் அகம்மலர, முகமலர, என்னைப்பார்த்து "அருள்" நீர் சொல்வது சரிதான் நாங்கள் இருவரும் சேர்ந்து அப்படிச் செய்வோம் என்று அன்பு ததும்பிய குரலில் விடையளித்தார். யான் அப்பொழுது இலங்கை வானொலியின் தமிழ்ப்பகுதிப் பேச்சுத் துறைக்கும், சமயத்துறைக்கும் பொறுப் திகாரியாயிருந்தேன். சேர் வைத்தியநாதனின் முயற்சி வெற்றியளித்தது. மகாசிவராத்திரியன்று நடக்கும் நான்கு சாமவிசேட நிகழ்ச்சிகளையும் அர்த்தசாமப்பூசையையும் வானொலி மூலம் அஞ்சல் செய்தது திருக்கேதீஸ்வரப் பெருமான அருள் சுரந்தார் தமிழகத்திலுள்ள பல அன்பர்கள் சேர்வைத்திய நாதன் அவர்களுக்கு இந்நிகழ்ச்சிகளையும், திருக்கேதீஸ்வரத்தையும பாராட்டிக கடிதம் எழுதினார்கள இலங்கை வானொலிக்கும் அவ்விதமான பல கடிதங்கள் வந்தன. இப்பொழுதும் மகா சிவராத்திரிவிழா திருக்கேதீச்சரத்தில் தொடர்ந்து சிறப்பாக நடந்து வருவது மகிழ்ச்சிகுரிய விடயமாகும்.

இவருக்கு திருக்கயிலாய பரம்பரையில வந்த தருமபுர ஆதினத்திலும், அதன் 25 வது குருமகாசந்நிதானமாய் அருட்செங்கோலோச்சிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியிடத்திலும் அளவில்லாதபற்றிருந்தது. கயிலைக் குருமணியவர்களை ஈழநாட்டிற்கு அழைத்தது தக்க முறையில் உபசரிக்கவேண்டுமென்ற எண்ணம் சேர் வைத்தியநாதன் அவர்களுக்கு இருந்தது அத்துடன், தருமையாதீனத்தின் கிளைமடமொன்றைத் திருக்கேதீஸ்வரத்தில் நிறுவவேண்டும், அம்மடத்தில் தருமையாதீனத்தின் பிரதிநிதியாக ஓர் தம்பிரான் சுவாமிகள் நிலையாக இருந்து தொண்டு புரிய வேண்டும் என்ற சீரிய எண்ணமும இவருக்கிருந்தது.

இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமிகள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும சமயத்துறையில்வந்து போவதற்குச் சிலவசதிகளை இரண்டு நாட்டு அரசாங்கங்களும் செய்து கொடுத்திருக்கிறதைப்போன்று தருமபுர ஆதினம் கிளைமடமொன்றைத் திருக்கேதீஸ்வரத்தில் தாபித்தால், அம்மடத்தைப் பரிபாலிக்கும் தம்பிரான் சுவாமிகள் இவ்விருநாட்டிற்கும் சிரம மில

(வளர்ச்சி 3-ம் பக்கம்)

---

## கோட்டுக் கொமுஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ. இல. 9281

உடுப்பிட்டி வன்னித்தம்பி இராஜையா மறுநாமம் இராசா
எதிராக — வாதி

1. திருக்கோணமலை அலிஸ் தோட்டம் மாணிக்கம் நடேசன் மயிலன் மாணிக்கம் கைம்பெண் ஆலட்சுமியின் பிரதிநிதி
2. வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராமன் முருகன்
3. பெண் காந்தியம்மா — பிரதிவாதிகள்

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்குக் குறித்த கோட்டால் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியு மிதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனமதை 1976ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ந் திகதி (14-10-76) வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக வருநது என்னால் பிரசித்த ஏலததில் விற்கப்படும்

ஆதனத்தின் பெறுமதி ரூபா 6000/-

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டி இறை 'பெதத குட்டிசீமா' வீடு $\frac{1}{3}$ ஷி நிலபர. $5\frac{1}{2}$ ஷி நிலபர. 3/8 ஷி 17/8 ஷி நிலபர. 5/8 இப்பிரிவுகட்கு ஆட்சிப்படி நிலபர 13 இதில் தெற்குப்புறமாக நிலபர 5 நீககி மிகுதி நிலபர. 8 இதில் மேற்குப்புறமாக நிலபர. $4\frac{1}{2}$ எல்லை கிழக்கு சின்னட்டிபொடியன் இராமன் மகள் கமலாவுக்குடைய ஆதனமும் ஈடுவாங்கற்காரனுக்குடைய ஆதனமும், வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு வல்லி சின்னப்பொடியன் மகள் பாறிக்குடைய ஆதனம் இதடங்கலும்.

கணக்கு விபரம்

| | |
|---|---|
| வழக்கு வைத்த தொகை | ரூபா 1800 00 |
| 17-9-66 தொடக்கம் 14-5-68 வரை ரூபா 1000/- க்கு வட்டி 8 வீதம் | 133 00 |
| 15-5-68 தொடக்கம் 5-6-1976 வரை ரூபா 1933/- க்கு 5 வீதப்படி வட்டி | 775 00 |
| 6-6-76 தொடக்கம் 14-10-76 வரை ரூபா 1708/- க்கு 5 வீதப்படி வட்டி | 45 50 |
| மொத்தம் ரூபா | 2,753 00 |

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

புலோலி மேற்கு,
புலோலி,
3-9-76

---

## தூய தொண்டர்...

[1ம் பக்க வளர்ச்சி]

அறுபத்து நான்குகலை
அருளுவாய் சரணம்
அணிதெல்லி யூர் துர்க்கை
அன்னையே சரணம்

(பாடியவர் அருட்கவி)

தொகுப்பு-: "வேற்குமரன்"
காரைநகர்

---

## தருமை ஆதீனத்தில் ஆவணி மூலவிழா

தருமை ஆதீனத்தில் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள், ஆதீனத்தில் சிறப்பு விழாவாகவுள்ள ஆவணி மூலத் திருநாளை ஆவணித்திங்கள் 16, 17, 18 மூன்றுதேதிகளிலும் சிறப்பாகநடாத்திவைத்தார்கள்.

ஆதீன கல்வி நிலையங்களாக விளங்கிவரும் ஸ்ரீ குருஞான சம்பந்தர் நினைவு ஆரம்பப் பள்ளி — உயர்நிலைப் பள்ளிகள் ஆண்டு விழாவையும், ஆதீனத் தேவாரப்பாடசாலை ஆதீன வேதசிவாகம பாடசாலை ஆண்டு விழாவையும் இரண்டு நாளும் "தொல்காப்பியத் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது.

ஆவணித் திங்கள் 18 ஆம் நாள அன்று மூலத் திருநாள் சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ சொக்நாதப்பெருமானுககு விசேட அபிடேக ஆராதனை நிகழ்ந்தது விழா மலராக "இந்துமத பாலபாடம்" என்ற நூலை பக்தகோடிகளுக்கு அருள் பிரசாதம் வழங்கினார்கள்.

## சேர். வைத்தியநாதனும்

*8 ம் பக்கத்து வளர்ச்சி*

லாமல் வந்து போகக் கூடி யவசதிகளைச் செய்து கொடுக்கமுடியும் என்பதே சேர் வைத்தியநாதன் அவர்களின் கருத்தாகும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குரு மணியவர்களும், வைத்திய நாதன் அவர்களும் இன்னும் சிலகாலம வாழ்ந்திருந்தால், தருமபுர ஆதீனத்தின் கிளைமடம் ஒன்று திருக்கேதீஸ்வரத்தில நிறுவப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் கனகாபிஷேக விழா மலர் ஒன்று 15 ஆண்டுகளுக்கு முன் சிறப்பாக வெளிவந்தது. அதில் 'திருக்கேதீச்சரம்'' பற்றிய கட்டுரை ஒன்றை, சேர். வைத்தியநாதன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அக்கட்டுரையின் இறுதிப் பாகம் வருமாறு:-

"இப்பெருந்தல தரிசனத்துக்கு நம் தருமைக் குருமணிகள் எழுந்தருளி வந்து தரிசித்தல் வேண்டும் தமிழ்நாடு செய்த தவப்பயனாக நாளும மொழியும் சமயமும் வளர்க்கும் நய கயிலைக்குருமணிகளின் தரிசனம் ஈழத்துச் சைவ பெருமக்களுக்கும் கிடைக்கச் செய்யும் அழைப்பே இது''

(வளரும்

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி
இல 4798/MB
அப்பலவாணர் தம்பியையா
மகள் இராசலட்சுமி
கைதடி வடக்கு, கைதடி.
— வழக்காளி
எதிராக
கந்தையா ஐயாத்துரை
நாவற்குழி தறபோது தச்சன் தோப்பு, கைதடி
— எதிராளி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் மேற்படி 4798/MB இலக்க வழக்கில் மேற்படி எதிராளியை வழக்காளிக்கு பின்சொல்லப்படும தொகையை கட்டும்படி தீர்மானித்து அதை அறவிடுதறகாக எனக்குக் கொடுக்கப்பட்ட ஆணையின்படி பின்னுல் ஆதன இடாப்பில் வரிக்கபட்டு ஆதனம் 1976ம் ஆண்டு ஐப்பசிமாதம் 6ந் திகதி (6-10 76) புதன்கிழமை முற்பகல் 1 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 3000/- மும் மேலும் ரூபா 1500/-க்கு 8-8-75 தொடக்கம் 19-12-75 வரைக்கும் நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு 19-12-75 தொடக்கம் முழுவதும் இறுத்துத் தீர்க்கும் வரைக்கும் நூற்றுக்கு 9% ஒன்பது வீத வட்டியும் ஷ வழக்குச் செலவு ரூபா 45.-.5 சதமும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று நாவற்குழி இறை இராக்கன்புலம் நி. பர 3 மூன்று பரப்புக்கும் எல்லை கிழக்கு சண்முகம் பெண் தங்கத்துக்குரிய ஆதனம் தெற்கு முருகன் கந்தையாவுக்குரிய ஆதனம்வடக்கு சின்னையா செட்டியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் மேற்கு வைரவன் கோபாலுக்குரிய ஆதனம்இதடங்கலும் பதிவு F3 2/287

எஸ். வி. சதாசிவம்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
சாவகச்சேரி

57, 10-9 27-8-76

## ஈட்டுவழக்கில் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல. ஈடு / 12293

துன்னலை தெற்கு வேலிப்பிள்ளை கைம்பெண் நாச்சிப்பிள்ளை
எதிராக — வழக்காளி

1. துன்னலை தெற்கு நாகப்பர் சண்முகம்
2. ஷ யூர் பெண் பரஞ்சோதி
3. ஷ யூர் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்கள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1976-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்தவாதிக்கு ரூபா 4 95-70 வும் மேலும் ரூபா 2500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 8 வட்டிவீதம் வழக்கு அணைந்த திகதியாகிய 1973-ம் ஆண்டு ஆனிமாதம் 7-ம் திகதியிலிருந்து தீர்வையாகிய 1974 ம் ஆண்டு ஆனி மாதம் 25ம் திகதி வரையுமான வட்டியும் அதனபின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 283- 8 இதில் நடைபெற்ற செலவு ரூபா 239 63 நடைபெறவேண்டிய செலவு ரூபா 63-77½ மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 78-77½ கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### ஆதன இடாப்பு

வடமராகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று:

1 துன்னலை சீரசுந்தரமுதலி குறிச்சியிறை தேனப்பை நி.பர 2, 7/8 ஷ நி.பர 6 3/8 ஷ நி 2,3/8 ஷ நி 2,7,8 ஷ நிர 5 5/8 நி 7 5/8 இப்பிரிவுகளில் ஆட்சிப்படி நி பர 10 7/8 எல்லை கிழக்கு வேலர் ஏகாம்பரத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனம். மேற்கு வீரகத்தி பொன்னையாருக்கும் மறுபேருக்குமுரியவாதனம் தெற்கு வலலிபுரம கைம்பெண் சிதம்பரத்திக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் இவ்வெல்லைக்குள் நிலத்தின் சொரியலாய் 1/5 பரப்பில் ½ பரப்பு நீக்கி மிகுதிப் பரப்புகளில ½ யும் 285/3008 பங்கும் 2தற்தரிய கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுக்கும்.

2. ஷ யிறை சீரதேவன் செம்பாடு நி பர 28 இதில் பிரிவிடலின்படி 2/3 பங்கில் 1/3 ஆட்சியின்படி நி பர 3 குளி 7¼ எல்லை கிழக்கு கண்ணகி அம்மன் கோவிலுக்குரிய வாதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு வல்லிபுரம் உலகருக்கும் மறுபேருக்குமுரியவாதனம் தெற்கு நாகப்பர் சண்முகத்திற்கும் மறுபேருக்குமுரியவாதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியிலரைவாசியும் மேற்குப் புறமாக முழுக்காணக்குள்ளிருக்கும் கிணற்றிலிதற்றரிய பங்கும் வழி வாய்க்காலும்.

கா. முத்துக்குமாருஐயர்

தங்கவேல் ஆலயம், நீதிமன்ற ஆணையாளரும்,
சந்நிதி வேல, கொமிஷன் விலைமதிப்பாளரும்
பருத்தித்துறை 26-8-76 53 10-9

## ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழ, இல 12427

1. கந்தையா கந்தசாமியும் (2) பெண் இராசம்மா இருவரும் வல்வெட்டி - வாதிகள்

எதிராக

1. ஞானிசெல்வன் 2. பெண் ஆச்சி- உடுப்பிட்டி 3. வேலன் கந்தையன் உடுப்பிட்டி, கறுவல் வேலன் கைம்பெண் இலச்சுமியின் ஆதனத்தின் தத்துவகாரன். - பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1976-ம் ஆண்டு அகடோபர் மாதம் 11-ந் திகதி (11-10-76) திங்கட்கிழமை முற்பகல்9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வடமாராட்சிப்பகுதி உடுப்பிட்டிக்கோயிற்பற்று, உடுப்பிட்டி ஆனை விலக்கினவாளி நில, 6½ எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சபாபதி மகள தங்கம்மாவும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு 2-ம ஆதனம தெற்கு கறுவல வேலன கைம்பெண் இலச்சுமியின் உரிமைக்காரரினதும் பிள்ளைகளினதும் இதில் சொரியலாய் 1/3 பங்கு காணியிலும் தெற்குப்புறமாக இருக்கும் கல்வீடும் அடுக்களையும் நிந்தமாகவும மதிப்பிட்ட விலை ரூபா 68 5) 2) ஆதனமிருக்குமிடம ஷ சொல்லப்படுவதரவது 'சந்தப்மதிராயன'' தோட்டம் நில 7 1/8 இதில் கிழக்குப்புறமாக 1/3பங்குநில- 2, குளிகள 6¾, எல்லை கிழக்கு மேல் சொலலப்படும் 1-ம ஆதனம், வடக்குறோட்டு மேற்கு கதிர்காமர் பொன்னுரின் உரிமைக்காரரினதும் மறு பேருடைய ஆதனமும் பனைகள், வடலிகள் இவ்வெல்லைக்குள் சொரியலாய் 1/3 பங்கும் மதிப்பிட்ட விலை ரூபா 6,345-00

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா | 1960-00 |
| வட்டிரூபா 1000-00 க்கு 12வீதப்படி 29-8-73 தொடக்கம் 3-6 73 வரை | ரூபா | 90-00 |
| வட்டி ரூபா 1960 00 க்கு 5வீதம்படி 3 6-74 தொடக்கம் 11-10-76 வரை | ரூபா | 228-64 |
| வழக்குச்செலவுகள் ரூபா 456-96 + 71 85 | | 528.81 |
| மொத்த ரூபா | | 2807-45 |

க. நல்லலிங்கம்

சிவலிங்க நிலையம்
வி எம். றோட்
பருத்தித்துறை
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்
7-9-76 விலைமதிப்பாளரும்

## மஹாளய பூசை

தென்புலத்தார் கடன் என்னும் மஹாளய பூசை இறந்தோர் பொருட்டு ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் செய்யப்படுவன இம் மஹாளய பட்ச காலம 9-9 76 வியாழக்கிழமை பிரதமையில் ஆரம்பித்து 23 9 76 வியாழக்கிழமை அமாவாசை தினத்தில் முடிவடைகிறது.

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்
இல: ஈடு 12781

1. சின்னத்தம்பி நடராசா
2. பெண் நாகரத்தினம் இருவரும் தும்பளை — வாதிகள்

எதிராக

1. புலோலி மேற்கு வெற்றிவேலு மயில்வாகனம் தன் வகையிலும் தனது காலஞ்சென்ற மனைவி இராசமமாவின ஆதனங்களின் சட்டபூர்வ பிரதிநிதியாகவும்
2. K துரைராசா
3. பெண் ருக்குமணி இருவரும் புலோலி மேற்கு

— பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியுப் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1976ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனங்களிடமிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 2850/ வும் மேலும 1500/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10% வட்டிவீதம வழக்கு அணைந்த திகதியாகிய 1974 ம் ஆண்டு ஆவணி மாதம் 4ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு வைகாசி மாதம 30ந் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வட்டியும கொடுக்கவேண்டியிருப்பதாலும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோவிற்பற்று

1. புலோலி மேற்கு வென்றிபாகு தேவன் குறிச்சியிறை சொக்கன் கல்லடி நிலப்பரப்பு 6 குளி 3 15/16 இதற்கு உ. கி வேலாயுதத்தால் அளந்து விந்தரிக்கப்பட்ட 165-ம் இலக்கப்பிளானில் "க" என்னும அட்சரத்தால் குறிப்பிடப்பட்டதுமான துண்டுக்கு நிலப்பரபபு 2 குளி 15 15/16 வீடு, கொட்டில்களும எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கும் தெற்கும் வெற்றிவேலு மயில்வாகனத்துக்குரிய ஆதனம். மேற்கு அருணசலம் பெண் பாறுபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதும்.

2. ஷ கோவிற்பற்று, புலோலி மேற்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை, கொட்டோடை நில, பரப்பு 17 5.8 இதில் கிழக்குப்புறமாக 2 1/4 பங்குக்குரிய நில. ப. 8 குளி 1 1/32 பனைகள். வடலிகளும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை வடக்கும் மேற்கும் சங்கரியார் கந்தையாவின் உரிமைக்காரரினதும் மறுபேருடைய ஆதனமும் இவ்வெல்லைக்குட்பட்டவைகளிற் சொரியலாய் பதினெட்டிலிரண்டு பங்கும்.

கா. முத்துக்குமாரு ஐயர்

"தங்கவேல் ஆலயம்" நீதிமன்ற ஆணையாளரும்
'சந்நிதி வேல்' கொமிசன் விலைமதிப்பாளரும்.
பருத்தித்துறை. 7-9-76 54. 10-9.

## Commission Sale

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று
வழ. இல. ஈடு 12637

சின்னத்தம்பி சபாபதி, சுந்தரம் மகள் செல்வமணி வல்லுவெட்டி — வாதிகள்

எதிராக

கணபதி கார்த்திகேசு நாலடி வல்லுவெட்டி உடுப்பிட்டி — பிரதிவாதி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக்கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1976ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6ந் திகதி (6-10-76) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனத்திடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று உடுப்பிட்டி இறை 'பூனைதாக்கி'' நிலப்பரப்பு 18 5/8 இதிலூடாகப் போகும் ஒழுங்கைக்கு மேற்குப் புறமாகவுள்ள நிலப்பரப்பு 9½ இதில் வடக்குப்புறமாகவுள்ள மூன்றில் ஒரு பங்குக்கு அளந்து கண்ட நிலப்பரப்பு 2 குளி 17 12/31 இதில் தெற்குப் புறமாக நில. பரப்பு 1 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 1 குளி 13 12/32 எல்லை கிழக்கு றோட்டு வடக்கு வேலன் நாகமுத்துக்குடைய வாதனம், மேற்கு வேலன் செல்லனுக்குடைய வாதனம, தெற்கு எதிரிக்குடைய வாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், வீடு, பனை, வடலிகள் மற்றும் அடங்கலும் இதற்கு கோட்டில் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 21,475/-

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிகளுக்கு ரூபா 3120/-வும் மேலும் ரூபா 2000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைந்த திகதியாகிய 1974-ம் ஆண்டு பங்குனி மாதம் 25ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு சித்திரை மாதம 10ந் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 800/- கொடுக்க வேண்டி இருப்பதாலும், முதலில ரூபா 1000/- கட்டப்பட்டிருக்கிறது.

கா. முத்துக்குமாரு ஐயர்

தங்கவேல் ஆலயம், நீதிமன்ற ஆணையாளரும்,
சந்நிதிவேல், கொமிஷன் விலைமதிப்பாளரும்
பருத்தித்துறை. 25-8-76 52, 10-9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைத்தேக்கி நிலத்தை வளஞ்செய்

### THOUGHTS TO BE TREASURED

பாசம் பயிலுயிர் தானே் பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசு என்ப,
பாசம் பயிலப் பதிபரம் ஆகலால்,
பாசம் பயிலப் பதிபசு வாமே.

The soul that mingles with Pasam (Anava Malam), it verily is called Pasu (that which is bound by Pasam), it verily is the lord of the body. As Pati is the Supreme (efficient) cause of (the soul's) union with Pasam (Maya, Pati too may be called Pasu (that which touches Pasam) owing to its play in Pasam.


# Hindu Organ

Friday, September 10, 1976


## Eightyeighth Year

For a religious journal the dawn of its eighty eighth year is certainly a creditable performance. Guided by the high code of Cultural Journalism, Inthusathanam — (Hindu Organ) has lived up to the ideals for which this publication was inaugurated on the eleventh day of September one thousand eight hundred and eighty nine by those Saiva devotees who were just then inspired by the strong wave of spiritual awakening stirred by the Great Navalar.

It cannot be denied that the survival of journals is not always assured. Some appear only to disappear within a few years. Others limp their way to fade away. Still others there are that move on steadily and confidently notwithstanding all difficulties and bearing every frustration.

In the case of the Inthusathanam the continuance is confidently presupposed for the one reason that the promoters of the service to Saivaism had clearly enunciated the purpose of the publication as a religious duty that cannot be disturbed by fluctuating fortunes of financial support. This does not mean that there is a continuous flow of support from the public. We are far from the ideal of self-sufficiency. The Saiva Public certainly know that they owe a duty to the religion and that is to lend support to this worthy cause of propaganda by journals.

We are confident that besides our long standing subscribers whose sense of service is inestimable, others will join them and make the institution self-confident.

## DEATH BEFORE DEATH

V. SUBRAMANIAM
Saiva-Pulavar

(Continued from last issue

Now, our hero can be thrown in the midst of gaities, in the midst of worldly revelry; none of these will attract him; he is the spoon which knows not the taste of the dainty dish, and "this is the death of the mind.

The characteristic of the mind is to grasp at anything, but as its channel and that of the senses have been turned inward, it cannot grasp at the things of the world. It now flies to the Holy Lord in good earnest; it sticks fast to Him. The senses of the aspirant pine after the Lord, his only thought is about Him, his only desire is to possess Him Thus sings Manickavasagar: உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன்.

The yearning for Him with melting heart, tearful eyes, and shivering frame, if experienced in the life of any, that man is truly blessed. That marks the intensity of the love which then holds sway. Masters of different religions have testified to it and their ecstatic utterances while in that mood will melt even a strong heart. Saints Manickavasagar Thayumanavar and others have left on record how they pined for the Lord and how all should pine for Him:

நெக்கு நெக்குள்ளுருகி, புருகி
நின்று, மிருந்துங் கிடந்து,
மெழுந்தும்
நக்கு மழுதும் தொழுதும்
வாழ்த்து நானாவிதத்தாற்
கூத்து நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர
சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்
லோ. என் பொல்லா
மணியைப் புணர்ந்தே.

In bliss dissolved soul melted utterly with meet laughter and tears, homage of hand and lip with every mystic dance. To see with joyous thrill that Sacred Form like ruddy evening sky. When shall I pass, in mystic union, joined with Him my faultless Gem.

As a result of this strong and sincere yearning the aspirant sees the Lord in everything the whole, world is to him an emblem of God. His mind cannot now see one thing from the other; the differences have disappeared, and in the insect that crawls, in the birds that fly, in the stone, and in the beast he adores the Lord,

பொன்னவன் காண், ஆணவன் காண் பெரியோர்க்
கென்றும் பெரியவன் காண்,
அரியவன் காண் அயனு
ளன் காண்,
எண்ணவன் காண், எழுத்த
வன் காண், இன்பக் கேள்வி
யிசையவன் காண்,
இயலவன் காண் எல்லாங்
காணும்
கண்ணவன் காண், கருத்தவன்
காண் கழிந்தோர் செல்லுங்
கதியவன் காண்
மதியவன் காண், கடல்
ஏழ் சூழ்ந்த
மண்ணவன் காண் வானவர்
வணங்கி யேத்தும் வலிவலத்
தான் காண்
அவன் என்மனத்துளானே

ceases here all differentiation which is the function of the mind, and this is the 'death proper of the mind'.

Even the aspirant is astonished at the death of the mind which was waging war against him like a formidable enemy.

அருளே யோ,ராலயமா,
யானந்த மாயிருந்த
பொருளோடு. யானிருக்கப்,
போயொளித்த நெஞ்சே நீ
மருள் தீர் முயற் கோடோ, வான்
மலரோ, பேய்த் தேரோ?
இருள் தீர நீயுறைந்த தெவ்
விடமோ காணேனே
(தாயுமானவர் ஏசற்ற வந்
நிலை - 9,

O mind, that is gone and hid while I am in union with that Being who is Bliss enshrined in the temple of Grace. Art thou the illusion-less hare's horn or sky-lotus or the mirage, I see not (my) darkness left where thou abidest.

Ahankara (I-hood) is the next veil to be consumed by the fire of wisdom. This is the last possession of our hero to be abandoned. Many of the sharp and irritating points of I-hood have been unconsciously rounded, while our hero was achiev-ing his conquest in the plains below, I did it; I want it; I said so. I should lead etc; have long ago bade farewell to him. Perhaps, what now assert themselves are:- I strive for Bliss; I am good; I attain Bliss etc — a very light shade of the 'I'. Even this should be exchanged for, the Lord does, the Lord is: the Lord wills. This done, the battle is over. (of தாயுமானவர் • பொருளியல்பு - 7)

நானெனுந் தன்மை நழுவியே, எவ்
வுயிர்க்கும்
தானெனவுண்மைதலை ச்சாருநா
ளெந்நாளோ?

This is the death of the 'I,

Those who go up the ladder so far, can hardly be distinguished from ordinary mad men, they have the simplicity of children and the self lessness of the demoniacs:

"பாலரொடு பேயர் பித்தர்
பான்மை யென நிற்பதுவே
சீலமிகு ஞானியர் தம் செய்கை
பராபரமே"

"Unless ye become like little children, ye shall not enter the Kingdom of Heaven," says another Master (St. Mathew, St. Manickavassagar prays to the Lord for a boon — namely – to make him die as a mani in the eyes of the world.

(To be continued)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday September 10, 1976.

EDITOR-IN-CHIEF E. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Jaffna Archaeological Society

### (Lecture by Dr. Michel Marliere)

(Continued from last issue)

I shall not insist on the very tight connections that historically link the Ceylonese and the Siamese Sanghas except to remind that there has been a so-called Sinhalese sect in Siam in ancient time as there is the Siam sect in contemporary Sri Lanka together with the Amarapura and the Ramanna sects;

**Malaysia**

In Malaysia, the archaeological traces of the Hindu and the diverse Buddhist cults which Islam superseded are few, although the Hindu influence is still preserved in royal and popular ceremonies, as I shall point out later.

As Claeys stated, the limitation of a Gupta model is very evident in the Vishnu from Ch'aiya. As Quaritch Wales recalls, Buddhist figures of Pure Gupta styles are known from Wieng Sra, Kedah and Perak, while Dvaravati style Buddhas are found as far as Ch'aiya. Remains of stupas dating from the 5th or 6th century have been excavated on the Coast of Kedah and Province Wellesley.

Very interesting pieces can be seen at the National Museum in Kuala Lumpur, and at Taiping Museum. It may be assumed that the jungle of Pohang still hides Hindu or Buddhist remains.

**Indonesia**

In Indonesia, the site of Barabadur is undoubtedly the most important temple in the world and probably one of the most impressive religious edifices one can contemplate. Its proportions are majestuous. Its carvings and sculptures are of exquisite beauty and elegance and superior craftsmanship.

The exquisiteness, elegance and superior craftsmanship of the Javanese artists also characterize the famous Chandi Mendut and all the sculptures of Prambanan. There can be admired all the Hasta Samyuta and Karanas transmitted by the Indian tradition.

On a smaller scale as regards the mass of architecture but on a considerably wider scale as regards the number of edifices, the island of Bali and a fringe of the next island of Lombok display a fascinating Hindu heritage in the field of archaeology and in that of the living religious traditions as well.

(To be continued)